# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:70** **தேதி:07.10.2015**

### DOT செயலர் மற்றும் கூடுதல் செயலருடன் FORUM தலைவர்கள் சந்திப்பு

அன்பார்ந்த தோழர்களே,

கடந்த FORUM கூட்ட முடிவின் அடிப்படையில் 07.10.2015 அன்று FORUMத்தின் CORE COMMITTEE உறுப்பினர்கள் 07.10.2015 அன்று DOT செயலாளர் திரு ராகேஷ் கார்க் அவர்களை சந்தித்தனர். FORUM அமைப்பாளர் தோழர் P.அபிமன்யு, தலைவர் தோழர் சந்தேஸ்வர் சிங், தோழர் K.செபாஸ்டியன் GS SNEA மற்றும் தோழர் பிரகலாத் ராய் GS AIBSNLEA ஆகியோர் அந்த கூட்டத்தில் கலந்துக் கொண்டனர். துணை டவர் நிறுவனம் அமைப்பது தொடர்பான தங்களின் கருத்துக்களை DOT செயலரிடம் FORUM தலைவர்கள் தெரிவித்தனர். மேலும் ஓய்வூதியர்களுக்கு 78.2% பஞ்சப்படி இணைப்பில் ஏற்படும் காலதாமதம் தொடர்பாக தங்களின் அதிருப்தியையும் தெரிவித்தனர். BSNL ஓய்வூதியதாரர்களுக்கான அடுத்தகட்ட ஓய்வூதிய மாற்றம் தொடர்பாக FORUMத்திடம் 01.05.2015 அன்று நடைபெற்ற சந்திப்பில் கொடுக்கப்பட்ட உறுதிமொழியை அமுல்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என DOT செயலரை கேட்டுக் கொண்டனர். தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும் என DOT செயலர் உறுதி அளித்துள்ளார்.

DOTயின் கூடுதல் செயலாளராக திரு N.சிவசைலம் ஒரு சில நாட்களுக்கு முன் பொறுப்பேற்றுள்ளார். FORUMத்தின் CORE COMMITTEE உறுப்பினர்கள் அவரை சந்தித்து தங்களின் வாழ்த்துக்களை தெரிவித்தனர். BSNL இயக்குனர் குழுவில் கூடுதல் செயலாளரும் ஒரு இயக்குனராக உள்ளதால், BSNLன் ஸ்திரத்தன்மை தொடர்பான பல விஷயங்களை விவாதித்ததோடு இந்த நிறுவனத்தை பலப்படுத்த அவரது முழுமையான ஒத்துழைப்பு தேவை என கேட்டுக் கொண்டனர். நாட்டின் முதன்மையான தொலை தொடர்பு நிறுவனமாக BSNL வரவேண்டும் என்கின்ற அவரது விருப்பத்தை தெரிவித்த கூடுதல் செயலர், அதற்கான முழுமையான ஒத்துழைப்பை தருவதாக உறுதி அளித்தார்.

**புதிய JTO தேர்வு விதிகளை அமுலாக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மத்திய சங்கத்தின் வற்புறுத்தல்:-** புதிய JTO தேர்வு விதிகளை ஒப்புதல் வழங்கிய BSNL இயக்குனர் குழுக் கூட்டத்தின் OFFICIAL MINUTES வெளியாகி உள்ளது. திருத்தப்பட்ட JTO தேர்வு விதிகளில் உள்ள கீழ்கண்ட இரண்டு நடவடிக்கைகளை உடனடியாக அமுலாக்க வேண்டும் என GM(Estt) திருமிகு மது அரோரா அவர்களை 06.10.2015 அன்று சந்தித்த BSNLஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு வற்புறுத்தி உள்ளார்.

1) அனைத்து OFFICIATING JTOக்களையும் நிரந்தரமான JTOக்களாக பதவி உயர்வு வழங்குவதற்கான உத்தரவை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.
2) திருத்தப்பட்ட JTO தேர்வு விதிகளின் அடிப்படையில் அடுத்த JTO LICE தேர்வு நடத்துவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். புதிய தேர்வு விதிகளின் அடிப்படையில் ஐந்து ஆண்டுகள் சேவை செய்துள்ள TTAக்கள் உள்ளிட்ட அனைவரும் இந்த தேர்வில் பங்கேற்க இயலும்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்.**